உ

# விசாலாமிர்தம்



அச்சுவேலி, தம்பாலை

அமரர், ஸ்ரீமதி.

## கந்தசாமி ஐயர் விசாலாக்ஷி அம்மா

## நினைவு மலர்

12-01-2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# விசாலாமிர்தம்



**அச்சுவேலி – தம்பாலை,**

**பாரத்வாஜ கோத்ரம்**

**அமரர், ஸ்ரீமதி**

## விசாலாக்ஷி அம்மா கந்தசாமி ஐயர்

**அவர்களின்**

## நினைவஞ்சலி மலர்

*12-01-2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

அன்போடும் பண்போடும்

எம்மைப் பெற்று வளர்த்து

எம் மனத்தில் என்றும் நிலைத்திருக்கும்

எமது அன்புத் தெய்வம்

அமரர்

ஸ்ரீமதி விசாலாக்ஷி அம்மா கந்தசாமி ஐயர்


அவர்களின்


பாதாரவிந்தங்களில்

இம்மலரினைச்

சமர்ப்பணம் செய்கின்றோம்

குடும்பத்தினர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



தோற்றம்
03-07-1930

மறைவு
03-01-2016

அமரர், ஸ்ரீமதி

## கந்தசாமி ஐயர் விசாலாக்ஷி அம்மா

தம்பாலை, அச்சுவேலி

### "திதி வெண்பா"

மன்மதநல் லாண்டதனில் மார்கழியில் அபரபட்சம்
தன்னில்வரு நவமியிலே தம்பாலை - தன்னிகரில்
அன்புடைய விசாலாக்ஷி கந்தசாமி ஐயருடன்
இன்பமுத்தி சென்றடைந்தாள் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digiti
noola

# அமரர். ஸ்ரீமதி விசாலாக்ஷி அம்மா கந்தசாமி ஐயர் அவர்களின் வாழ்க்கை வரலாறு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவள் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

என்ற குறளுக்கு இணங்க, அன்னை தமது வாழ்க்கைப் பயணத்தை வாழ்ந்து நிறைவுசெய்துள்ளார். இந்தியாவில் தஞ்சாவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் **ஜெகதீஸ்வர ஐயர் பிரகதாம்பாள் அம்மா** தம்பதியரின் அன்பு மகளாகப் பிறந்து, தஞ்சைப் பெரும்பதியின் நான்மாட வீதியினில் ஓடி விளையாடி சிவபூமியாகிய இலங்கையரி வந்தடைந்து, யாழ்ப்பாணம் தம்பாலையைச் சேர்ந்த பாரத்வாஜ கோத்தரத்தில் பிறந்த **நாகலிங்க ஐயர் கந்தசாமி ஐய**ரின் வாழ்க்கைத் துணைவியாக இல்லறத்தில் இணைந்து தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்தார்.

தனது புகுந்த இடத்தில், குடும்பத்தில், உறவினர்கள், ஊர்மக்கள், அயலவர்கள் எல்லோரிடமும் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் நடந்துகொள்வார். எல்லோரையும் வரவேற்பதிலும், விருந்தோம்புவதிலும் உபசரிப்பதிலும் இவருக்கு இணை எவருமில்லை என்பது யாவரும் அறிந்ததே.

மிகுந்த தெய்வபக்தி கொண்ட இவர் வளலாய்ப் பிள்ளையார், இடைக்காடு மாணிக்கப் பிள்ளையார், பெரிய தம்பிரான், காசி விஸ்வநாதர், தம்பாலை வெல்லன் பிள்ளையார், வைரவர், கொட்டடி வைரவர் ஆலயங்களில் நித்திய நைமித்திக பூஜை வழிபாடுகள் செய்வதற்குத் தன்னை அர்ப்பணித்து ஒத்துழைப்பு வழங்கினார். அத்துடன், சந்நிதித் திருவிழாக் காலங்களில் தண்ணீர்ப்பந்தல், அன்னதான சேவை என்பவற்றை வருடம்தோறும் தவறாது செய்துவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலாட்சி அம்மா அவர்கள் தமது இல்வாழ்க்கைப் பேறாக செல்வரத்தினம்மா(அமரர்) இராஜேஸ்வரி அம்மா, நடராஜ சர்மா(அமரர்), இலட்சுமணசர்மா, பாஸ்கரக் குருக்கள், வரலட்சுமியம்மா, ஜெயராமக் குருக்கள், ரமணிகரசர்மா, தனலட்சுமி அம்மா, பங்கஜவல்லி அம்மா, பாலகிருஷ்ண சர்மா ஆகியோரைத் தமது மக்கட் பேறுகளாகப் பெற்றார். தமது மக்களுக்குப் பொருத்தமான துணைகளையும் உரிய காலத்தில் இணைத்து தமது மக்கள், மருமக்கள், பேரக் குழந்தைகளுடன் சிறப்பாக வாழ்ந்து குலவிய நாட்களில் தமது வாழ்க்கைத்துணையை இழக்க நேரிட்டது. இருப்பினும், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், அனைவரினதும் அனுசரணையுடன் தமது இறுதிக் காலத்தை கழித்து ஒருசில கிழமைகள் நோயுற்று வாழ்ந்து 03. 01. 2016 ஞாயிற்றுக்கிழமை மாலை அபரபக்க நவமித் திதியில் இறைபதம் எய்தினார்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைப் பாடல்கள்

## *திருச்சிற்றம்பலம்*

### *தேவாரம்*

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமதித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயார
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே

### *திருவாசகம்*

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

### *திருவிசைப்பா*

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்.

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி லிரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வது மொருநாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப்பயிரவர்
தொக்குத்தொகு தொக்குந் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ காமாட்சியம்மன் விருத்தம்

## த்யானம்

ஸ்மர விஜயகோடீ ஸாதகா நந்ததாடீ
ம்ருதுகுணபரிபேடீ முக்யா தம்ப வாடீ
முநிருத்பரிபாடீ மோஹிதாஜாண்ட கோடீ
பரமசிவதூடீ பாதுமாம் காமகோடீ //
ஜெய ஜெய ஜகதம்பிகேசிவே
ஜெய ஜெய காமாஷி

## ஆசிரிய விருத்தம்

சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
சோதியாய் நின்ற உமையே
சுக்கிர வாரத்திலுனை கண்டு தரிசித்தவர்கள்
துன்பத்தை நீக்கிடுவாய்
சிந்தைதனிலுன் பாரதந் தன்னையே தொழுபவர்கள்
துயரத்தை மாற்றி விடுவாய்
ஜெகமெலா முன் மாய்கை புகழவென்னா லாமோ
சிறியனால் முடிந்திடாது
சொந்தவுன் மைந்தனா யெப்தனையிரட்சிக்கச்
சிறிய கடன் உன்னதம்மா
சிவ சிவ மகேஸ்வரி பரமனிடயீஸ்வரி
சிரோன்மணி மனோன் மணியுநீ
அந்தரி துந்தரி நிரந்தரி பரம்பரி
யனாத ரட்சகியும் நீயே,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுமையே.

பத்துவிரல் மோதிரம் எத்தனை பிரகாசமானது
பாடகந் தண்டை கொலுசும்,
பச்சை வைடூரியம் மிச்சையா இழைத்திட்ட
பாதச் சிலம்பினொலியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதது மூககுத்தியும் ரத்தினப் பதக்கமும்
மோகன மாலையழகும்,
முழுதும் வைடூரியம் புஷ்பராகத்தினால்
முடிந்திட்ட தாலி யழகும்,
சுத்தமாயிருக்கின்ற காதினிற் கம்மலுஞ்
செங்கையிற் பொன் கங்கணமும்
ஜெகமெலாம் விலைபெற்ற முகமெலா மொளியுற்ற
சிறகாது கொப்பினழகும்
அத்த வரதன் தங்கை சக்தி சிவரூபத்தை
அடியனாற் சொல்ல திறமோ
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுமையே.

கெதியாக வுந்தனைக் கொண்டாடி நினது முன்
குறைகளைச் சொல்லி நின்றும்,
கொடுமையா யென்மீதில் வறுமையை வைத்து நீ
குழப்பமா யிருப்பதேனோ,
சதிகாரியென்று நானறியாம லுந்தனைச்
சதமாக நம்பி னேனே,
சற்றாகிலும் மனது வைத்தென்னை ரட்சிக்க
சாதக முனக் கில்லையோ?
மதி போல வொளியுற்ற புகழ்நெடுங் கரமுடைய
மதகஜனை யீன்ற தாயே,
மாயனிட தங்கையே பரமனது மங்கை
மயானத்தில் நின்றவுமையே
அதிகாரி யென்று நானாசையால் நம்பினேன்
அன்பு வைத்தென்னை யாள்வாய்,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுமையே.

பூமியிற் பிள்ளையாய் பிரிந்தம் வளர்ந்து நான்
பேரான ஸ்தலமு மறியேன்,
பெரியோர்கள் தரிசன மொருநாளும் கண்டுநான்
போற்றிக் கொண்டாடியறியேன்
வாமியென்றுன்னைச் சிவகாமி யென்றே சொல்லி,
வாயினாற் பாடியறியேன்
மாதா பிதாவினது பாதத்தை நானுமே
வணங்கியொரு நாளுமறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியென்றே யெண்ணி சதுருடன் கைக்கூப்பிச்
சரணங்கள் செய்து மறியேன்
சற்குருவின் பாதார விந்தங்களைக் கண்டு
சாஷ்டாங்க தெண்டனிட்டறியேன்,
ஆமிந்த பூமியிலடியனைப் போல் மூடன்
ஆச்சி நீ கண்டதுண்டோ,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுடையே.

பெற்றதா யென்றென்னை மெத்தவும் நம்பி நான்
பிரியமா யிருந்தே னம்மா
பித்தலாட்டக் காரியென்று நானறியாது உன்
புருஷனை மறந்தேனம்மா
பக்தனாயிருந்து உன் சித்தமும் மிறங்காமல்
பாராமுகம் பார்த்திருந்தால்.
பாலன் யானெப்படி விசனமில் லாமலே
பாங்குடனிருப்பதம்மா,
இத்தனை மோசங்க ளானது ஆகாது
இது தருமமல் லவம்மா
எந்தனை ரக்ஷிக்க சிந்தனை களில்லையோ
யிது நீதி யல்ல வம்மா
அத்தி முகனாசையாலிப்புத்திரனை மறந்தையோ
அதை யெனக்கருள் புரிகுவாய்,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுமையே.

மாயவன் தங்கை நீ மரகத வல்லி நீ
மணிமந்திரகாரி நீயே
மாயா சொரூபிநீ மகேஸ்வரி யுமானநீ
மலையரை யன் மகளான நீ
தாயே மீனாட்சி நீ சற்குண வல்லி நீ
தயாநிதி விசாலாட்சி நீ
தரணியில் பெயர் பெற்ற பெரிய நாயகியும் நீ
சரவணனை யீன்ற வளும்நீ
பேய்களுடனாடிநீ அத்தனிட பாகமதில்
பேறுபெற வளர்ந்தவளும்நீ
பிரணவ சொரூபிநீ பிரசன்ன வல்லிநீ
பிரியவுண்ணா முலையுந



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரமகமாயிநீ ஆனந்தவல்லி நீ
அகிலாண்ட வல்லி நீயே,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுமையே.

பொல்லாத பிள்ளையாய் இருந்தாலும் பெற்றதாய்
புத்திதனை சொல்லவில்லையோ
பேய்பிள்ளை யானாலும் தான் பெற்ற பிள்ளையே
பிரியமாய் வளர்க்கவில்லையோ,
கல்லாகிலும் மூச்சு நில்லாமல் வாய்விட்டுக்
கதறி நாணமுற குரலில்,
கடுகதனி லெட்டிலொரு கூறுவதி லாகிலுன்
காதினில் நுழைந்த தில்லையோ
இல்லாத வன்மெங்களேன் மீதிலெனம்மா
இனி விடுவதில்லை சும்மா
இருவரும் மடிபிடித்து தெருதனில் வீழ்வது
இது தரும மல்லவம்மா
எல்லாரு முன்னையே சொல்லியே யேசுவார்
அது நீதியல்ல வம்மா.
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுமையே.

முன்னையோர் சென்மாந்திர மெனென்ன பாவங்கள்
மூடநான் செய்தேனம்மா
மெய்யென்று பொய் சொல்லி கைதனிற் பொருள் தட்டி
மோசங்கள் பண்ணினேனோ.
என்னவோ தெரியாது இக்கணந் தன்னில்
இக்கட்டு வந்ததம்மா,
ஏழை நான் செய்த பிழை தாய் பொருத்தருள் தந்து
என் கவலை தீருமம்மா
சின்னங்களாகுது ஜெயமில்லையோ தாயே
சிர நாண மாகுதம்மா,
சிந்தனைகளென்மீதில் வைத்து நற்பாக்கியமருள்
சிவசக்தி காமாட்சி நீ
அன்னவாகனமேறி யானந்தமாவும்
அடியேன் முன் வந்து நிற்பாய்,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னையே துணை யென்றுறுதியாய் நம்பினேன்
உன் பாதம் சாட்சியாக,
உன்னை அன்றி வேறு துணை யினியாரை யுங்காணேன்
உலகந்தனி லெந்தனுக்கு
பிள்ளை யென்றெண்ணி நீ சொல்லாம லென் வறுமை
போக்கடித் தென்னைரட்சி,
பூலோக மெச்சவே பாலன் மார்க்கண்டன் போல்
பிரியமாய் காத்திடம்மா,
அன்னையே யின்னை முன்ன டியேனை ரட்சிக்க
அட்டி செய்யா தேயம்மா,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுமையே.

பாரதனி லுள்ளனவும் பாக்கியத்தோடென்னைப்
பாங்குடனிரட்சிக்கவும்
பக்தியாய் உன் பாதம் நித்தந் தரிசித்த
பாலருக் கருள் புரியவும்
சீர் பெற்ற தேகத்தில் சிறு பிணிகள் வராமல்
செங்கலிய னணா காமலும்,
சேயினிட பாக்கியஞ் செல்வங்களைத் தந்து
ஜெயம் பெற்று வாழ்ந்து வரவும்,
பேர் பெற்ற காலனைப் பின்றொடர வொட்டாமற்
பிரியமாய்க் காத்திடம்மா
பிரியமாயுன் மீதில் சிறியனான் சொன்ன கவி
பிழைகளைப் பொறுத்து ரட்சி,
ஆறதனில் மணல் குவித் தரிய பூசை செய்தவென்
னம்மை யோகாம் பிகை நீயே,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுமையே.

எத்தனை ஜென்னம் எடுத்தேனோ தெரியாது
இப்பூமி தன்னிலம்மா,
இனியாகிலும் கிருபை வைத் தென்னை ரட்சியும்
இனி ஜென்ன மெடுத்திடாமல்,
முத்தி தர வேணுமென்று உன்னையே தொழுது நான்
முக்காலும் நம்பினேனே,
முன் பின்னுந் தோணாத மனிதரைப் போலநீ
முழித்திருக் காதே யம்மா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி பெவுன் மீதில் பக்தியாய் நான் சொன்ன
விருத்தங்கள் பதினொன்றையும்,
விருப்பமாய்க் கேட்டு நீயளித்திடுஞ் செல்வத்தை
விமலனா ரேசப் போறார்
அத்தனிட பாசமதை விட்டு வந்தேயென்
அருங்குறை யைத் தீருமம்மா,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுமையே.

சேயினிட பாக்கியஞ் செல்வங்களைத் தந்து
ஜெயம் பெற்று வாழ்ந்து வரவும்.
பேர் பெற்ற காலனைப் பின்றொடர வொட்டாமற்
பிரியமாய்க் காத்திடம்மா
பிரியமாயுன் மீதில் சிறியனான் சொன்ன கவி
பிழைகளைப் பொறுத்து ரட்சி,
ஆறதனில் மணல் குவித் தரிய பூசை செய்தவென்
னம்மை யோகாம் பிகை நீயே,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுமையே.

எத்தனை ஜென்னம் எடுத்தேனோ தெரியாது
இப்பூமி தன்னிலம்மா,
இனியாகிலும் கிருபை வைத் தென்னை ரட்சியும்
இனி ஜென்ன மெடுத்திடாமல்,
முத்தி தர வேணுமென்று உன்னையே தொழுது நான்
முக்காலும் நம்பினேனே,
முன் பின்னுந் தோணாத மனிதரைப் போலநீ
முழித்திருக் காதே யம்மா,
வெற்றி பெவுன் மீதில் பக்தியாய் நான் சொன்ன
விருத்தங்கள் பதினொன்றையும்,
விருப்பமாய்க் கேட்டு நீயளித்திடுஞ் செல்வத்தை
விமலனா ரேசப் போறார்
அத்தனிட பாசமதை விட்டு வந்தேயென்
அருங்குறை யைத் தீருமம்மா,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சியுமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்

## *5 ஆம் அதிகாரம் இல்வாழ்க்கை*

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை

**இல்வாழ்க்கையில் இருப்பவன் இயல்பான தொடர்புடைய பெற்றோர், மனைவி, மக்கள் என்ற முத்திறத்தாருக்கும் அவர்களது வழியில் துணையாக நிற்பான்.**

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை

**துறவியர்க்கும், வறியவர்க்கும், யாரும் துணையின்றி இறந்தவர்க்கும் இல்வாழ்வான் துணையாவான்.**

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறோம்பல் தலை

**இறந்த மூதாதையர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர், தான் என்ற ஐந்திடங்களுக்கும் வேண்டிய அறச்செயல்களைச் செய்தல் இல்லறத்தவன் கடமையாகும்.**

பழி அஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல்

**பழிச்சொல்லுக்கு அஞ்சி, தன் செல்வத்தைப் பகிர்ந்துண்டு வாழும் வாழ்க்கை இருக்குமாயின் அவனது சந்ததி அற்றுப்போதல் இல்லை.**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

**இல்வாழ்க்கை அன்பும், அறமும் உடையதாக இருக்குமாயின், அவ்வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவேயாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவ தெவன்

**ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தோடு நடத்துவானாயின் அவன் துறவுநெறியில் போய் எதையும் பெறவேண்டிய தேவை இல்லை.**

இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை

**முறைப்படி இல்வாழ்க்கை வாழ்பவன் பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி போன்றவர்களைவிட மேலானவன்.**

ஆற்றின ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து

**பிறரையும் அறநெறியில் ஒழுகச்செய்து, தானும் நல்லறத்தில் வாழ்பவனது வாழ்க்கை தவம் செய்பவர்களின் தவத்தைவிட வலிமையானதாகும்.**

அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அ∴தும்
பிறன் பழிப்பதில்லாயின் நன்று

**இருவகை அறத்தினுள் அறம் என்று சிறப்பித்துக் கூறப்படுவது இல்லறமேயாகும். துறவறமும் பிறரால் பழிக்கப்படுதில்லாதாயின் நன்று.**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

**உலகில் வாழவேண்டிய முறைப்படி இல்லறம் மேற்கொண்டு வாழ்பவன், வானுலகத்திலுள்ள தேவர்களுள் ஒருவனாக மதிக்கப்படுவான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 ஆம் அதிகாரம் - விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

**இல்லறத்தில் இருந்து வாழ்வதென்பது விருந்தினரைப் பேணி அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கே**

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

**விருந்தினர் வெளியே இருக்கத் தான் உள்ளே தனித் திருந்து உண்ணுதல் சாவா மருந்தாயினும் விரும்பத்தக்கதன்று**

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று

**தினமும் தம்மிடம் வருகின்ற விருந்தினரை பேணுகின்றவனது வாழ்க்கை வறுமையால் துன்புற்றுக் கெடுவதில்லை.**

அகன் அமர்ந்து செய்யாள் உறையும் முகன் அமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்

**முகமலர்ச்சியோடு நல்ல விருந்தினரைப் பேணுகின் றவனது வீட்டில் திருமகள் மனமகிழ்ந்து தங்குவாள்.**

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்

**முதலில் விருந்தினரை உண்ணச்செய்து மிகுதியானதைத் தான் உண்கின்ற இயல்புள்ளவன் தனது நிலத்தில் விதைக்கவும் வேண்டுமோ?**

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடுதேடிவந்து இரவாமல், தம்மை நாடிவந்து இடுவாரை ஏற்கும் தவசிகளையும் பேணித் தன்னிடம் வருகின்ற விருந்தினர்களையும் பேணி வாழ்பவன் வானவரால் நல்ல விருந்தினராக ஏற்றுக்கொள்ளப்படுவான்.**

இனைத்துணைத் தென்ப தொன்றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்

**விருந்தோம்பலாகிய வேள்வியின் பயன் எவ்வளவு என்று அளவிட்டுச் சொல்லத் தேவையில்லை. விருந்தினரின் தகுதியின் அளவே அது.**

பரிந்தோம்பிப் பற்றற்றேோம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்

**விருந்தினரைப் பேணி அவர்களுக்கு உணவிடுதலாகிய வேள்வியைச் செய்யாதவர், பொருளை நிலையானது என மயங்கிப் பாதுகாத்தும் பின் இழந்தபோது "ஆதரவு அற்றோம்" என வருந்துவர்.**

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கள் உண்டு

**செல்வத்தில் வறுமை என்பது, விருந்தோம்பலைப் புறக்கணிக்கும் அறியாமையாகும். அது அறிவிலிகளிடம் உள்ளதாகும்.**

மோப்பக் குழையும் அனிச்சம் முகந் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

**அனிச்சம்பூ முகர்ந்தால் மட்டுமே வாடும். ஆனால், விருந்தினரோ முகம் மாறுபட்டு நோக்கினாலே வாடிவிடுவார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

தஞ்சாவூரைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தம்பாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஐயர் விசாலாட்சி அம்மா அவர்கள் சிவபதமடைந்த செய்தி எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தியுள்ளது. இவர் தமது கணவனார் சிவஸ்ரீ கந்தசாமி ஐயர் அவர்களின் இறைபணிக்கு உறுதுணையாக இருந்ததன்மூலம் எமது சமயத்தை வளர்த்தார். தமது உற்றார் உறவினர்களுடன் அன்பாகவும், ஆதரவாகவும் வாழ்ந்து அவர்களின் இன்ப துன்பங்களில் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு வந்தார்.

இவ்வகையான நற்பண்புகளுடன் இல்லற வாழ்வை இனிதாக நடத்தி, நன்மக்களைப் பெற்று, அவர்களை அறவழியில் வாழச்செய்த பெருந்தகை. இவர் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்துடன் இரண்டறக் கலந்துகொண்டார். இவர் நற்பேறடைய எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளி அம்பாளை மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இழப்புக் குறித்து, துயரப்படும் உற்றார் உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை துயருறும் மனத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

இவ்வண்ணம்,

**பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்**

**சகுந்தலா குடும்பத்தினர்**

அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்.

திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எத்தனை பிறவிகள் எடுத்தாலும்

ஐயிரண்டு திங்கள் அடிவயிற்றில் நீசுமந்து
கையிரண்டு ஏந்திக் கனகமுலைப் பால் தந்து
இவ்வையகத்திலே வாழ்வாங்கு பலகாலம்
வாழ்வாய் எனநான் நினைத்திருந்த வேளையிலே
நான் கண்ட கனவெல்லாம் கலைந்தே போனதம்மா

ஈன்றாளோடெண்ணக் கடவுளும் இல்லையென்று
உரைத்ததாம் நான்மணிக்கடிகை - ஒப்பிட
முடியுமோ உன் அளவிலாப் புகழை - நீ
தந்த கல்வியால் சமூகத்தில் உயர்ந்த நான்
இன்னும் எத்தனை பிறவிகள்
எடுத்தாலும் உங்களுக்கு மகனாகப் பிறக்கவே
ஆசைப்படுகிறேன்.

கருணை உள்ளமும் செல்லக் கண்டிப்பும்
நிறைந்த அன்பு மாமியே
மாமி என உமை நான் அழைத்து மகிழ்ந்திருந்த
வேளையிலே பாவி எமன் உம் உயிரை
பரலோகம் எடுத்து சென்றானோ

நோயுற்ற போதும் "பவானி" "பவா" என ஒரு
மகளாக நினைத்து செல்லமாக அழைத்த உங்களுக்கு
எத்தனை பிறவிகள் எடுத்தாலும் கூட
நல்ல மகளாகப் பிறந்திட வேண்டும்.

விசாலமான மனதுடன்
முழுமதியை முகத்தில் ஒளிர வைத்து
விண்மீன்களை புன்னகையில் தூவிவிட்டு
வந்தாரை வரவேற்கும் அன்புப் பாட்டியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று "பாட்டி" "பாட்டி" என்று காற்றோடு
கதை பேசுகின்றோம் அவை யாவும்
கானல் நீராய் காணாமல் போனதுவே
என்ன கொடுமை

நிலாவைக் காண்பித்து அமுதூட்டி - அந்த
நிலாவிலேயே தடம் வைக்க உந்துதல் அளித்து
நிஜமான வாழ்க்கையை உணர வைத்து
இப்போது நிழலாய் மறைந்து எங்கு போனாய்

கண்களிலே அன்பினை வைத்திருப்பவளே
உன் கண்களாய் இருந்திட ஆசைப்படுகின்றேன்
இன்று இத்தாளினிலே கவிதையாக உருவெடுத்தவளே
இவ்வண்டமே அழிந்தாலும் உன் புகழ் அழியாதே
நாம் உங்களின் பேரப்பிள்ளைகளாக வரவேண்டும்
என்றும் எத்தனை பிறவிகள் எடுத்தாலும்
எமது வாழ்க்கைக்கு வண்ணமூட்டிய குலமகளே
உன் வெள்ளை மனதைப் புகழ
இச்சிற்றாக்கம் போதாது
இயலுமானவரை எம் அன்புடன் கூடிய
எழுத்துக்களை முத்துக்களாகப் பதிக்கின்றோம்
இத்தாள் தனிலே

உங்கள் அறிவுரைகள் என்றும் எம்மை
நெகிழ வைக்கும் அற்புத பாடங்கள்
அதன்வழி நின்று அறவழி நடப்போம்
உங்கள் நினைவுகளைச் சுமந்து செல்வோம்
எத்தனை பிறவிகள் எடுத்தாலும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

**- மகன் சிவம் குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணவில்லையே
# கண்கண்ட தெய்வத்தை.......

அறம் பொருள் இன்பம் வீடு பேறுகளைச் சிறப்புறப் பெற்று "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" எனும் பொன் வாசகத்திற்கமைய மற்றவர்களையும் மகிழ்வுறச் செய்தார். எல்லோருக்கும் சிறந்த உபசாரி ஆகவும் உபகாரி ஆகவும் விளங்கினார். அனுசரிப்பு, உபசரிப்பு, விருந்தோம்பல் எனப் பல கைங்கர்யங்களை மற்றவர்களுக்கு வழங்கி எல்லோரதும் அன்பு ஆசையைத் தன்வசமாக்கினார். கைப்பக்குவமிக்க இவரின் விருந்தோம்பலைப் பலரும் அனுபவித்திருந்தனர். இதை வாழ்த்தச் சில நாவுகள் மறந்தாலும், பசியாறிய வயிறுகள் வாழ்த்திய வண்ணமே இருக்கும்.

தன் புத்திர, பௌத்திரச் செல்வங்களை குல ஆசாரம் தவறாத கலாசாரத்துடன் வளர்த்து உத்தமோத்தமர்களாக்கியது மட்டுமல்லாமல் மன்னுயிர்களையும் சிறப்புறச் செய்தார்.

சுப, அசுப காரியங்களை முன்னின்று நடத்தும் திறமையும் விருப்பமும் ஆர்வமும் கொண்ட எங்கள் அம்மம்மா தனக்காகத் தன் பிறந்த தினத்தைக்கூடக் கொண்டாடுவதில்லை. அவரது பிறந்த தினத்தைத்தானே உலகமே அன்னையர் தினமாகக் கொண்டாடுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

அம்மம்மா, உங்கள் ஆத்மா சிவலோகமடையப் பிரார்த்தனை செய்கிறோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!

**- பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரனின் அன்புத் தூறல்.......

பாட்டி,

அன்பின் சிகரம் நீ
இன்பத் தென்றல் நீ
காக்கும் தெய்வம் நீ
கருணைக் கடலும் நீ
மங்காத ஒளியும் நீ
சிருங்கார உருவம் நீ
உள்ளத்தில் உறைந்தாய் நீ
உருவில் தாய்மை நீ பாட்டி.........

ஓம் சாந்தி சாந்தி சாந்தி........

**அன்புப் பேரன்**
**ஜெ. அரவிந்தன்**

## பூட்டி எப்ப வருவீங்கள்?......

பூப்போல அணைத்து உணவு ஊட்டி
சீராட்டி த் தாலாட்டுப் பாடி
கொஞ்சிக் குலாவிய பூட்டி எப்ப வருவீங்கள்?
ஏன் கோபமா பூட்டி?
நாங்கள் குழப்படியா பூட்டி?
நீங்கள் கெதியா வாங்கோ.........
இனிப்பு வாங்கி வாங்கோ........!

**தேடி அழும் பூட்டப் பிள்ளைகள்**
**பாவனா,**
**ஜஸ்விதா,**
**கிரண்ணிஜா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூண்டா மணிவிளக்கே அம்மம்மா

அம்மம்மா என்றிட இனி யாரோ - எ
ம்மை அன்புடன் பாசவலைகளால் அரவணைத்தீர்கள்
மழலைகளாக இருந்த எம்மை மாமலைகளாக்கி மகிழ்வுற்றீர்கள் - பொ
ம்மைகளாக இருந்த எம்மை புலமைப்படுத்தி பெருமையுற்றீர்கள்
மாண்புடன் வாழ வழிகாட்டிய தூண்டாமணி விளக்கே அம்மம்மா
எங்கே போனீர்கள் எம்மை விட்டு?

பூமிக்கு நாமொரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீரமுன் நித்திரை கொண்டோம்
நித்திரை கொள்வது நியதிஎன் றாலும்
யாத்திரை என்பது தொடர்கதை தானே!

- பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணம் என்பது மறுபிறப்புத்தானே....

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போலொரு பழையதும் இல்லை
இரண்டுமே இல்லாவிடின் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை

பிறப்பு இல்லாமலே நாளொன்றும் இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்றும் இல்லை
நேசத்தில் வரும் நினைவுகள் தொல்லை
பாசத்தைப் போல் போதையும் இல்லை

பாசம் உலாவிய கண்கள் எங்கே?
நேசம் துளாவிய கைகள் எங்கே?
தேசம் அளாவிய கால்களும் எங்கே?
வேசம் இல்லாத புன்னகை எங்கே?

கடல்தொட ஆறுகள் கலங்குவதில்லை
தரைதொட தாரைகள் அழுவதுமில்லை
நதி போன்றதே விதி என்று கண்டும்
மதி கொண்ட மானிடா மயங்குவதென்ன?

- **பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூட்டப் பிள்ளைகள் துயரம்

பூட்டி................. என்னாச்சு
உங்களுக்கு
ஏன் கண்திறக்க
முடியவில்லை?
அழகாக சேலை கட்டி
மாலை போட்டு ஏன் இந்த நித்திரை?
நாங்கள் "A B C D ......"
சொல்லித்தரவா?
பொக்கை வாய்திறந்து
சிரியுங்களேன்
"இங்கே வா இங்கே வா"
என்று கூப்பிடுங்கோவன்
ஏன் எல்லோரும்
அழுகிறீர்கள்?
பதில் சொல்லுங்களேன்
எங்கே தூக்கிச் செல்லுகிறீர்கள்
எங்கள் பாட்டியை?
கவனம்......... பாத்து.....
பூட்டிக்கு வலிக்கும்.

**- விசாலி, ஆரபி, ராகவி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடியிருந்த கோவிலுக்காக எம் சமர்ப்பணம்

எம் குலத்தின் ஆணி வேராய் மூலமாய்த் திகழ்ந்த.
எம் தாயே அம்மம்மா நீவிர் ஓர் கலைக்கழகம் அம்மா
எத்தனை அனுபவங்க்ள எத்தனை கருத்துக்கள்
எத்தனை போதனைகள் எத்தனை வழிகாட்டல்கள்
அத்தனையும் முத்துக்கள் அம்மம்மா
இரத்தின திலகமாய் எம் மனத்தில் வாழ்ந்த நீர் காட்டிய
பாதையை வழித்தடமாகக் கொண்டு நாம் நடப்போம்
ஆணை இது அம்மம்மா
நீங்கள் நடந்த பாதைகள் வெறும் தடங்கள் அல்ல
எம் வாழ்வின் சீரிய நெறிக் கோட்பாடுகள்
உங்களது பாசமும் அரவணைப்பும் கரிசனையும்
தீராத எதிர்பார்ப்பாய் இருக்குதம்மா மனத்திலே
பாரபட்சம் காட்டா உள்ளமும் நேர்மையான
திறனும் சகஜமாய்ப் பழகும் பண்பும் எம்மை வழிநடத்தும்.
உம் வழியில் நாமும் சென்று சிறப்புறுவோம்.
கற்பக தருவாய், குலவிளக்காய், எம் மனத்தில்
குடியிருந்த கோவிலாய் நிஜமாகத் திகழ்ந்த நீர்
படமாகிய மாயமென்ன?
என்றாலும் எம் எல்லோர் மனத்திலும்
கடைசி மூச்சு உள்ளவரை என்றும் வாழ்வீர்!
இறைவனிடம் ஒரு வேண்டுதல்.
இவ்வுலகில் உம் தேவைக்காக, பக்திக்காக, தன்னை அர்ப்பணித்த தாயை அவ்வுலகிலும் தொடரும் வண்ணம் அம்பலவாண சித்தி விநாயகன் அழைத்தான் என்பது உறுதி. எமது நப்பாசை, அம்மம்மா, உங்கள் ஆன்மா விநாயகர் திருவடியில் நித்திய வாழ்வு வாழ மனதாரப் பிரார்த்திக்கின்றோம். தாருமையா கடவுளே!

**பேரன்புடன்,**

**பதிமாநிருபன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலியுரை

மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் மக்கட் பேறு

எமது பாடசாலையின் பிரதம குரு சிவஸ்ரீ ஜெயராமக் குருக்கள் அவர்களின் அன்புமிகு அன்னையார் திருமதி விசாலாட்சி அம்மாள் கந்தசாமி ஐயர் அவர்கள் இறைபதம் சேர்ந்துள்ளார்கள். திருமதி விசாலாட்சி அம்மாள் அவர்கள் 05.01.2016 ஆம் ஆண்டு தமது அகவை எண்பத்தாறில் இவ்வுலக வாழ்வைப் பூரணப்படுத்தி மறுமை அடைந்துள்ளமை எம்மையெல்லாம் மிகுந்த துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது. இல்லறம் எனும் நல்லறம் பூண்டு தன்சாட்சியாக பத்துச் செல்வங்களையும் பெற்று சிவப்பணிபூண்ட மங்கல மங்கை அவரைக் காண்பதே அம்மனின் பிரதியாகவே ஒளிவீசும். பிரகாசமான அவரின் தோற்றமும் பணிவும் பக்தியும் எல்லோர் மீதும் அவர் காட்டும் அன்பும் அறிவும் மனிதப்பிறவியின் உயர் விழுமியங்களே. தமது பதியின் பணிக்கு பக்கபலமாக நின்று ஈன்றெடுத்த செல்வங்களின் கல்விக்கும் உயர்வுக்கும் உயிர் நாடியாக விளங்கி தமது குலமுறை ஆசாரங்களில் உயர்ந்தொழுகி எமது ஊரான இடைக்காடு மட்டுமன்றி அயலூரான தம்பாலை, வளலாய் ஊர் மக்களின் மனங்களிலும் தமது உயர்ந்த பண்புகளால் நிறைந்து நிற்பவர்.

அத்தகைய உயர் பண்பாளரை நாம் இழந்து நிற்கின்றோம். எனினும் காலநதியில் அனைவரும் நீந்த வேண்டியது நியதியே.

"நெருநல் உளனொருவன் இன்று இல்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பிரதம குரு அவர்களுக்கும் அவரது குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

**-கல்லூரிச்சமூகம்-**

**யா: இடைக்காடு மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DEEPEST CONDOLENCE



We regret to hear the death of Mrs.K.Visaladchiamma Who is the Mother of Mr.K.R.Sarma Principal – Hindu Vidyalaya, Rajagiriya.

We regard the sad demise of K.Visaladchiamma as an irreparable loss for everybody especially Mr.K.R.Sarma's family.

On Behalf of the Divisional Director of Education-Nugegoda Division and the Principals of Nugegoda Division, Convey Our Sympathy to the family and we pray she may attain moksha.

With Deepest condolence,

Divisonal Director of Education

And Principals Union-Nugegoda Division.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னஞ்சல் துயர்பகிர்வு

## ஸ்ரீ ஜயவர்த்தனபுர இந்து வித்தியாலயம் இராஜகிரிய

## இரங்கல் உரை

தோற்றம்

03.07.1930



மறைவு

03.01.2016

(திருமதி.விசாலாட்சி அம்மா கந்தசாமிஜயர்)

எமது வித்தியாலய அதிபர் க.இரமணீகரசர்மா அவர்களின் அன்புத் தாயார்

திருமதி.விசாலாட்சி அம்மா அவர்கள் கடந்த 03.01.2016 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டுஆழ்ந்த கவலையடைந்தோம்.அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு,அம்மையாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது கல்லூரிச் சமுகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! ! சாந்தி ! ! !

ஆசிரியர்கள்/மாணவர்கள்/
பாடசாலை அபிவிருத்தி சங்கம்
பழைய மாணவர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னஞ்சல் துயர்பகிர்வு

## தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரி
## துயர்பகிர்வு

மலர்வு
03.07.1930



உதிர்வு
03.01.2016

திருமதி.விசாலாட்சி அம்மா கந்தசாமிஜயர்
(சந்நதி வீதி -தம்பாலை - அச்சுவேலி)

தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளரான திருமதி.பவானி இரமணீகரசர்மா அவர்களின் அன்பு மாமியார் திருமதி.விசாலாட்சி அம்மா கந்தசாமிஜயர் அவர்கள் கடந்த 03.01.2016 அன்று காலமான செய்தி கேட்டு பெருந்துயரடைந்தோம். எமது கல்லூரிச் சமூகத்தின் சார்பில் கண்ணீர்ப் பூக்களை அன்னாருக்கு காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

சாந்தி ! சாந்தி ! ! சாந்தி ! ! !

ஆழ்ந்த துயருடன்
பீடாதிபதி ,விரிவுரையாளர்கள்
2ம்/3ம் வருட பயிலுனர்கள்
மற்றும் கல்விசாரா ஊழியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி ஆழ்ந்த இரங்கல்கள்



ஆண்டவன்
அடியில்
03.01.2016

[illegible]

# அமரர் கந்தசாமி ஐயர் விசாலாக்ஷி அம்மா

ஆதிய எனது அம்மாவின் [illegible] சின்னம்மா ஆகிய உன் சிவபதம் எய்திய [illegible] கேட்டு ஆழ்ந்த கவலையடைந்தேன். உன் கள்ளமில்லா முகத்தை சிறுவயதிலிருந்து இன்று வரை கண்டவேளையில் கலங்கி நின்று [illegible] கொண்டேன். என் தாயுடன் [illegible] வேளையும் சின்னம்மா வீட்டிற்கு போக வேண்டும் என்று அழுவேன். விடுமுறை வந்து விட்டால் என் தாயிடம் கெஞ்சுவேன். உன்னிடம் வர அம்மா, என்தாயின் முகத்தில் மலர்ந்திருக்கும் உன் முகத்தில் என் தாயின் உருவையும் நான் பார்த்து ரசிப்பேன். உன அப்பாவின் பெயரை நான் கொண்டதால் என்னை "ராஜு ராஜு" என்று அன்பாக அழைப்பாய். எனக்கு என்னென்னவெல்லாம் வேண்டுமோ அதையெல்லாம் வாங்கிக் கொடுப்பாய். தாய்க்கும் உனக்கும் வித்தியாசமே இல்லை. இன்றும் [illegible] போலவே விதம் விதமான பலகாரங்களை செய்து [illegible] சீராட்டி பாராட்டி வளர்த்த என் சின்ன அன்னையே [illegible] பாசம் வைத்திருந்தாய் என் அம்மா உன்மேல் அந்த பாசத்தை அளவிடவே முடியாது. சகோதரப் பாசத்திற்கு நீங்கள் [illegible] சகோதரங்கள் யாருடைய வீட்டிலே விசேஷங்கள் நடைபெற்றாலும் அதை உன் வீட்டு விசேஷமாக முன்னின்று நடத்து கொண்டு எல்லா வேலையும் இழுத்துப் போட்டு நீயே செய்து முடிப்பாய். அப்படி ஒரு ஆற்றலை [illegible] உனக்கு நீயே நிகர். [illegible] அம்மாவை இழந்து தவிக்கும் நாங்கள் உன்னுருவில் அம்மாவைப் பார்த்து ஆறுதல் அடைந்தோம். இனி யார் எமக்கு ஆறுதல் கூறுவார்? ராஜு ராஜு என்று இனியார் என்னை அன்பாக அழைப்பார்? இன்று உன்னைப் பிரிந்து வாடுகின்றோம். உங்கள் குடும்பத்திற்கு [illegible] இனி யார் ஆறுதல் கூற முடியும்? இவ்வுலகை விட்டு நீ இறைவனடி சென்று விட்டாய். ஆழ்ந்த கவலையுடன் துயர்பகிர்ந்து ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். என் கண்ணீர்ப் பூக்களை உனக்குக் காணிக்கையாக்குகின்றேன்.

04.01.2015

பெறாமகன்
சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சாரியார்.

[illegible] T.P : 077 [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணையத்தளத்தில்**
**துயர்பகிர்வு**
**(வளலாய்)**



தோற்றம் : 03.˙.07.˙.1930 மறைவு : 03.˙.01.˙. 2016

தஞ்சாவூர் தமிழ்நாடு இந்தியாவைப் பிறப்பிடமாகவும் தம்பாலை அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி அம்மாள் கந்தசாமி ஐயர் அவர்கள் தை 3ம் நாள் 2016 அன்று இலங்கையில் காலமானார். இவர் வளலாய் தம்பாலை இடைக்காடு பகுதியில் உள்ள ஆலயங்களில் பரம்பரை பரம்பரையாக பூசகராக கடமையாற்றிய காலஞ்சென்ற கந்தசாமி ஐயர் அவர்களின் அன்பு மனைவியாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் அவரது இல்லத்தில் தை மாதம் 4ம் நாள் 2016 அன்று இடம் பெற்றது. அன்னாரின் மறைவிற்காக கண்கள் பனிக்க வருந்தும் புலம்பெயர் தேசங்களில் வாழும் வளலாய் உறவுகள், அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல வளலாய் பிள்ளையாரை வழிபடுகின்றனர்.

துயர் பகிர : ஜெயம் ஐயா -094 21 205 8326



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் துயர்பகிர்வு



தஞ்சாவூர் தமிழ்நாடு இந்தியா வை பிறப்பிடமாகவும் தம்பாலை அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி அம்மாள் கந்தசாமி ஐயர் அவர்கள் தை 3ம் நாள் 2016 அன்று இலங்கையில் காலமானார். இவர் வளலாய் தம்பாலை இடைக்காடு பகுதியில் உள்ள ஆலயங்களில் பரம்பரை பரம்பரையாக பூசகராக கடமையாற்றிய காலஞ்சென்ற கந்தசாமி ஐயர் அவர்களின் அன்பு மனைவியாவார். அன்னாரின் இறுதி சடங்குகள் அவரது இல்லத்தில் தை மாதம் 4ம் நாள் 2016 அன்று இடம் பெற்றது.


அன்னாரின் மறைவிற்காக கண்கள் பனிக்க வருந்தும் புலம்பெயர் தேசங்களில் வாழும் வளலாய் உறவுகள், அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல வளலாய் பிள்ளையாரை வழிபடுகின்றனர்.

துயர் பகிர - ஜெயம் ஐயா - +94 21 205 8326



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர்பகிரும் பதாகைகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத்தின் ஆருயிர்த் தெய்வமாய், பேரன்பின் பாத்திரமாய் சுடரொளியாய் விளங்கிய **ஸ்ரீமதி விசாலாட்சி அம்மா கந்தசாமி ஐயர்** அவர்களின் மறைவுச் செய்தியைக் கேள்வியுற்றுப் பல வழிகளிலும் ஆறுதல் கூறி உதவி புரிந்தோர்க்கும், இல்லத்திற்கு வந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்கட்கும், ஈமக்கிரியைகளிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டவர்கட்கும், அஞ்சலியுரை ஆற்றியவர்களுக்கும், அனுதாபச் செய்திகளைத் தொலைபேசி வாயிலாகவும், கடிதமூலமாகவும் அறிவித்து எமது துயரில் பங்குகொண்ட அன்புள்ளங்கட்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்கட்கும், மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியவர்கட்கும், கண்ணீர அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்ட அனைத்து அன்புள்ளங்களிற்கும் இம்மலருக்குத் தம் நினைவலைகளை அனுப்பியவர்கட்கும், சிறந்த முறையில் இதனை வடிவமைத்துத் தந்த அச்சகத்தினருக்கும் ஆற்றொணாத் துயர மத்தியில் நாவெழா நிலையில் பணிவன்புடன் நன்றி நவில்கின்றோம்.

**தம்பாலை,** **- குடும்பத்தினர்**

**அச்சுவேலி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வம்சா**

**பாரத்வாஜ கோத்ரம்**

*நாகலிங்க ஐயர்
+
*செல்லம்மா

*கந்தசாமி ஐயர் — *புவனேஸ்வரி — *ந

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *செல்வரத்தினம்மா | இராஜேஸ்வரி | *நடராஜசர்மா (கோபால்) | இலட்சுமணசர்மா | பாஸ்கரக்குருக்கள் | வரல |
| + | + | | + | + | + |
| *இராமச்சந்திரக் குருக்கள் | பாலசுப்பிரமணிய சர்மா | | நாகேஸ்வரி | சரோஜினிதேவி | சதாச |
| *பிரபாகரன் | கம்ஸவதனா<br>வதனமாலா<br>செந்தூரசர்மா | | வைதேகி<br>மந்தாகினி<br>கேதாரசர்மா | கர்ணிகா<br>கஜானனசர்மா<br>கங்கா<br>கம்ஷா | அபிர<br>அபர்<br>நடர |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம்சாவளி

### கௌசிக கோத்ரம்

*ஜெகதீஸ்வர ஐயர்
+
*பிரகதாம்பாள்

| | | | | |
|---|---|---|---|---|
| *நாகராஜ ஐயர் | *செல்லம்மா | *ராசம்மா | விசாலாட்சி | தங்கம்மா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வரலட்சுமி | ஜெயராமக்குருக்கள் | இரமணிகரசர்மா | தனலட்சுமி | பங்கஜவல்லி | பாலகிருஷ்ணசர்மா (கண்ணன்) |
| + | + | + | + | + | + |
| சதாசிவஐயர் | *யோகமலர், சுலோஜனா | பவானி | சிவகுமாரசர்மா | செல்வராஜசர்மா | கவிதா |
| அபிராமி | கீர்த்தனா | ஹரிவத்சன் | சுபாங்கன் | கார்த்தீபசர்மா | அட்சயா |
| அபர்ணா | கீதாஞ்சனா | பவித்திரா | மாதங்கி | கஸ்தூரி | சந்தோஷ் |
| நடராஜசர்மா | அரவிந்தன் | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ
அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ அது இங்கேயே
கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொருநாள் அது
வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின்
சாராம்சமுமாகும்.

—பகவான்
ஸ்ரீ கிருஸ்ணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org